# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

<u>ஆணை எண்: 399/மா/2025</u>

<u>நாள்: 21.01.2026</u>

R. மயில்சாமி
மதுரை --- முறையீட்டு மனுதாரர்

(1) செயற்பொறியாளர் (திட்டம்)
மதுரை மாநகராட்சி
(2) உரிமையாளர்,
அரிஸ்டோ மல்ட்டி ஸ்பெசாலிட்டி
மருத்துவமனை, மதுரை --- எதிர்மனுதாரர்கள்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவரின் 09.10.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.10.2023 அன்று பெறப்பட்டு, 399/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## <u>ஆணை</u>

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்திநகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண் 5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R.மயில்சாமி என்பவர் தனது 09.10.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்), வார்டு எண் 61, பைபாஸ் ரோடு, அபர்ணா டவர் எதிரில் பொன்மேனி கதவு எண் 50–ல் இயங்கி வரும் "அரிஸ்டோ" மல்ட்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை மூன்று மாடிகளை கொண்ட மருத்துவமனை பல படுக்கை அறைகள் கொண்டதும், 24 x 7 மணி நேரமும் செயல்பட்டு வரும் மருத்துவமனை திட்ட அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இம்மருத்துவமனைக்கு வாகனம் நிறுத்துவதற்கு போதிய இடைவெளி இடம் விடாததால் வாகனத்தை ரோட்டில் நிறுத்த வேண்டியுள்ளது. மேலும் அரிஸ்டோ மருத்துவமனை கட்டிடத்திற்கு அரசு விதிகளின்படி 6 மீட்டர் இடைவெளி இடம் (Set Back Spaces) இரண்டு புறமும் இடைவெளி இடம் விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டு உள்ளது. இது குறித்து புகார் மனுவை பதிவு தபாலில் (RT475888325IN) 11.09.2023 தேதியில் அனுப்பி இருந்தும் இதுநாள் வரையிலும் நடவடிக்கை எடுக்கவில்லை. மேற்படி மருத்துவமனை கட்டிடத்தை கண்டும் காணாமல் மெத்தனமாக செயல்பட்டு வரும் மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்) உதவி ஆணையாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் (திட்டம்) மற்றும் சம்பந்தப்பட்ட

அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டும் எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரத்தை மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிடுமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கிறேன். மேலும் அரிஸ்டோ மருத்துவமனை கட்டிடம் பொது மக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டடம் (உரிமம்) சட்டம், 1965 பிரிவு 2 (8)–ன்படி வருவாய் துறையிடம் உரிமம் பெறாமலும் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்பு பணி துறையிடம் மற்றும் பிற அரசு துறைகளிடம் உரிய அனுமதி பெறாமலும் செயல்பட்டு வரும் "அரிஸ்டோ" மல்ட்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டிடம் கட்டியும் வாகனம் நிறுத்துவதற்கு போதிய இடம் விடாமலும் கட்டிடத்திற்கு இரண்டு புறம் இடைவெளி இடம் 6 மீட்டர் (Set Back Space) விடாமலும் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட கட்டிடத்தை, நகர் ஊரமைப்பு சட்டம், 1971–ன் பிரிவு 85 மற்றும் உடன்படிக்கப்பட்ட பிரிவுகள் 56(1) மற்றும் 57 கீழ் Stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிட்டும் Lock and seal and demolition வழங்கி மற்றும் அரசாணை எண் 07 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 10.01.2023–ன் அரசாணையின்படியும், மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 21724/2016/BA2 நாள் 03.01.2017–ன் கடிதத்தின்படி விரைவான நடவடிக்கை எடுக்க உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை மிக பணிவன்புடனும் தாழ்மையுடனும் வேண்டிக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 27.12.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் மதுரை மாநகராட்சி, செயற்பொறியாளரிடம் (திட்டம்) கோரப்பட்டது.

3. மதுரை மாநகராட்சி நகர திட்டமிடுநர் தன்னுடைய 17.12.2025 நாளிட்ட கடிதம் மதிஈ4/018074/2025–ல் கீழ்க்கண்டவாறு தனது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்:

"மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிற்கிணங்க உள்ளாட்சி அமைப்புகள், தனியார் பட்டா நிலங்களில் கட்டப்பட்டுள்ள விதி மீறல் கட்டிடங்கள், அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தை மீறி கட்டப்பட்ட வணிக கட்டிடங்கள், பலமாடி கட்டிடங்களின் அங்கீகாரமற்ற கட்டுமானம் மற்றும் தவறான மாற்றங்களை கட்டுப்படுத்தவும், அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடங்களை அகற்றவும், கண்காணிக்கவும், மாண்பமை உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை திறம்பட செயல்படுத்தவும், காவல் கண்காணிப்பாளர், காவல் ஆணையர், மாநகராட்சி ஆணையர் (ஒருங்கிணைப்பாளர்), நகர் மற்றும் ஊரமைப்பு துணை இயக்குநர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வருவாய் கோட்டாட்சியர், உதவி இயக்குநர், பேரூராட்சி, நிர்வாக பொறியாளர் TANGEDCO ஆகியோரை கொண்ட உயர்மட்ட கண்காணிப்பு குழு அமைத்து நடவடிக்கை மேற்கொள்ள, அரசாணை (2D) எண் 15 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 01.03.2024–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிற்கிணங்க வெளியிடப்பட்ட அரசாணையின்படி உயர்மட்ட கண்காணிப்பு குழுவின் உறுப்பினர்களை நியமித்து மதுரை மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறை ஆணை எண் Roc. 17665/2022/TP3 நாள் 24.10.2024–ல் ஆணை வரப்பெற்றது. அதன்படி கண்காணிப்புக் குழுக்கூட்டம் நடத்துவதற்கு ஏதுவான நாள் தெரிவிக்கக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்ற விவரம் சமர்ப்பிக்கப்படுகிறது.

1971–ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம் 282, 296 (1) & (2) வது பிரிவுகளின் கீழ் அறிவிப்பு மேற்படி கட்டிடத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே விதிமீறல் செய்து கட்டப்பட்டுள்ள அரிஸ்டோ மருத்துவமனை உயர்மட்ட கண்காணிப்புக்குழு கூட்டப் பொருளில் சேர்க்கப்பட்டுள்ளது. உயர்மட்ட கண்காணிப்புக் குழு வழிகாட்டுதலின்படி மேற்படி கட்டிடத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவ மன்றத்தில் 23.12.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 04.12.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. இந்நிலையில், மற்றொரு எதிர்மனுதாரரான அரிஸ்டோ சிறப்பு மருத்துவமனை உரிமையாளர் தன்னுடைய 22.12.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

''மதுரை மாநகராட்சியில் வார்டு எண் 69, 50–B, பைபாஸ் ரோடு என்ற முகவரியில் இயங்கி வரும் அரிஸ்டோ சிறப்பு மருத்துவமனை கட்டிடம் அனுமதி உத்தரவு எண் 39/10, க.வி. எண் மெ.ம.பொ.5/8301/09, நாள் 20.01.2010படி அடித்தளம் – 6806 ச.அடி, தரைத் தளம் – 7882 ச.அடி, முதல் தளம் – 5780 ச.அடி. இரண்டாம் தளம் – 5780 ச.அடி அனுமதியுடனும் (மேலும் மூன்றாம் தளம் அனுமதி பெறும் நோக்கத்துடனும்) மதுரை மாநகராட்சி திட்ட அனுமதியுடன் வரைபடம் மற்றும் கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளது. மூன்றாம் தளம் அனுமதியற்ற கட்டுமானத்திற்கு அபராதத் தொகை ரூ.30,000/– செலுத்தி ரசீது எண் 6155887 நாள் 26.08.2011. மேலும் அதற்குரிய வரியினையும் இதுநாள் வரை தவறாமல் செலுத்தி வருகிறேன். அந்த ரசீதுகளையும் இணைத்துள்ளேன்.

மேலும் மாநகராட்சி லைசென்ஸ், தீயணைப்புத் துறை லைசென்ஸ் மற்றும் அனைத்து அனுமதிகளும் வரி வகைகளும் நாளது தேதி வரை முறையாக செலுத்தி வருகிறோம்.

அடித்தளத்திலும் (Basement) கட்டிடத்தின் பின்புறமும் 9,000 ச.அடி அளவில் வாகன பார்க்கிங் வசதி உள்ளது. அதன் புகைப்படங்களையும் இணைத்துள்ளேன். மேலும், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் கூறும் ஆலோசனையை ஏற்று கட்டிடத்தை வரன்முறைப்படுத்த தயாராக உள்ளேன்.

இம்மருத்துவமனையானது 2012–ல் தொடங்கப்பட்டு இதுநாள் வரை இப்பகுதி மக்கள் பயன்பெறும் வகையில் மருத்துவ சேவைகளை செய்து வருகிறோம். பொது மக்களுக்கு எவ்வித இடையூறுமின்றி செயல்பட்டு வருகின்றது.

மனுதாரர் தன்னை சமூக ஆர்வலர் எனக் கூறிக்கொண்டு இது போன்ற தவறான புகார்களை அனுப்பி அனைவரையும் மன உளைச்சலுக்கு ஆளாக்கி அவர்களிடம் ஆதாயம் பெறும் நோக்கில் இதை செய்து வருகிறார் என இப்பகுதி மற்ற கட்டிட உரிமையாளர்கள் மற்றும் மருத்துவமனை உரிமையாளர்கள் கூறி வருகின்றனர். எனவே, இம்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து தருமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' எனத் தெரிவித்துள்ளார்.

6. மனுதாரர் 23.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்), வார்டு எண் 61, பைபாஸ் ரோடு, அபர்ணா டவர் எதிரில் பொன்மேனி கதவு எண் 50–ல் இயங்கி வரும் “அரிஸ்டோ” மல்ட்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை பல படுக்கை அறைகள் கொண்டு மூன்று மாடிகளுடன், செயல்பட்டு வரும் இவ்மருத்துவமனை திட்ட அனுமதிக்கு மாறாக கூடுதலாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் அரிஸ்டோ மருத்துவமனை கட்டிடத்திற்கு அரசு விதிகளின்படி 6 மீட்டர் இடைவெளி இடம் (Set Back Space) இரண்டு புறமும் இடைவெளி இடம் விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டும் பார்கிங் வசதியில்லாமல் கட்டப்பட்டுள்ளதால் வாகனத்தை ரோட்டில் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும் அரிஸ்டோ மருத்துவமனை கட்டிடம் பொது மக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டடம் (உரிமம்) சட்டம், 1965 பிரிவு 2 (8)–ன்படி வருவாய் துறையிடம் உரிமம் பெறாமலும் மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்பு பணி துறையிடம் மற்றும் பிற அரசு துறைகளிடம் உரிய அனுமதி பெறாமலும் செயல்பட்டு வரும் “அரிஸ்டோ” மல்ட்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டிடம் கட்டியும் வாகனம் நிறுத்துவதற்கு போதிய இடம் விடாமலும் கட்டிடத்திற்கு இரண்டு புறம் இடைவெளி இடம் 6 மீட்டர் (Set Back Space) விடாமலும் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட கட்டிடத்தை, நகர் ஊரமைப்பு சட்டம், 1971–ன் பிரிவு 85 மற்றும் உடன்படிக்கப்பட்ட பிரிவுகள் 56(1) மற்றும் 57 கீழ் Stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிட்டும் Lock and seal and demolition வழங்கி மற்றும் அரசாணை எண் 07 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 10.01.2023–ன் அரசாணையின்படியும், மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 21724/2016/BA2 நாள் 03.01.2017–ன் கடிதத்தின்படி விரைவான நடவடிக்கை எடுக்குமாறும் மேற்கண்ட விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்தினை கண்டும் காணமாலும் இருந்த மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் சம்மந்தப்பட்ட அலுவலர்களின் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறும் மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை மிக தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.”

7. எதிர்மனுதாரர் தரப்பில் மதுரை மாநகராட்சி செயற்பொறியாளர் 23.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வு வழக்கு எண்W.P.(MD) No.12175 of 2018, W.M.P(MD) No.11079 and 11080 of 2018ல் 6/3/2024 நாளிட்ட ஆணைக்கிற்கிணங்க தனியார் பட்டா நிலங்களில் கட்டுப்பட்டுள்ள விதிமீறல் கட்டிடங்கள், அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தை மீறி கட்டப்பட்ட வணிக கட்டிங்கள், பலமாடி கட்டிடங்களின் அங்கீகாரமற்ற கட்டுமானம் மற்றும் தவறான மாற்றங்களை கட்டுப்படுத்தவும், மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தின் வழிகாட்டுதல்களை திறம்பட செயல்படுத்தவும் காவல் கண்காணிப்பாளர், காவல் ஆணையர், மாநகராட்சி ஆணையர் (ஒருங்கிணைப்பாளர்) நகர் மற்றும் ஊரமைப்பு துணை இயக்குநர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வருவாய் கோட்டாட்சியர், உதவி இயக்குநர் பேரூராட்சி, நிர்வாக பொறியாளர் TANGEDCO ஆகியோரை கொண்ட உயர்மட்ட கண்காணிப்பு குழு அமைத்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் (நநி1) துறையின்அரசாணை (2D) எண் 15, நாள் 01.03.2024ல் ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை உத்தரவிற்கிணங்க வெளியிடப்பட்ட அரசாணையின்படி உயர்மட்ட கண்காணிப்பு குழுவின் உறுப்பினர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண் Roc.No.17665/2022/TP3 நாள் 24.10.2024ல் ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி கண்காணிப்புக் குழுக் கூட்டம் நடத்துவதற்கு ஏதுவான நாள் தெரிவிக்கக் கோரி மாவட்டஆட்சித்தலைவர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், 1971 ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம் 282, 296(1) மற்றும் (2)வது பிரிவுகளின் கீழ் அறிவிப்பு மேற்படி கட்டிடத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், விதிமீறல் செய்து கட்டப்பட்டுள்ள அரிஸ்டோ மருத்துவமனை உயர்மட்ட கண்காணிப்புக் குழு கூட்டப் பொருளில் சேர்க்கப்பட்டுள்ளது. கண்காணிப்புக் குழு வழிகாட்டுதலின்படி மேற்படி கட்டிடத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.''

8. மற்றொரு எதிர்மனுதாரரான அரிஸ்டோ சிறப்பு மருத்துவமனையின் உரிமையாளர் 23.12.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் புகார் தொடர்பாக எனது அரிஸ்ட்டோ சிறப்பு மருத்துவ மனை கட்டிடம் அனுமதி உத்தரவு எண்.39/10 க.வி.எண்.மெ.ம.பொ 5/8301/09 நாள் 20.01.2010ன்படி அடித்தளம் 6806 சதுரடி, தரை தளம் 7882 சதுரடி, முதல் தளம் 5780 சதுரடி இரண்டாம் தளம் 5780 சதுரடி அனுமதியுடனும், மதுரை மாநகராட்சி திட்ட அனுமதி உடன் வரைபடம் மற்றும் கட்டிட அனுமதி பெறப்பட்டுள்ளது.

மூன்றாம் தளத்திற்கு அனுமதி பெறவில்லை. எனவே, மதுரை மாநகராட்சியால் அனுமதியற்ற கட்டுமானத்திற்கு அபராத தொகை ரூ 30,000/– செலுத்தியுள்ளோம். மேலும், அதற்குரிய வரியினையும், செலுத்தி வருகிறோம். அனுமதியற்ற மூன்றாம் தளத்தினை வரன்முறை செய்து கொள்வதற்கு தயாராக உள்ளேன். அடிதளத்திலும், கட்டிடத்தின் பின்புறமும் 9000 சதுரடி அளவில் வாகன பார்க்கிங் வசதி உள்ளது.

மனுதாரர் தன்னை சமூக ஆர்வலர் எனக் கூறிக்கொண்டு இது போன்ற தவறான புகார்களை அனுப்பி அனைவரையும், மன உளச்சலுக்கு ஆளாக்கி அவர்களிடம் ஆதாயம் பெறும் நோக்கில் செய்து வருகிறார் என இப்பகுதி கட்டிட உரிமையாளர்கள் மற்றும் மருத்துவமனை உரிமையாளர்கள் கூறி வருவதால் மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மருத்துவ மனை கட்டிடத்திற்கு அனுமதி பெறப்பட்ட சான்றிதழ்கள் மருத்துவ மனைக்கு பார்க்கிங் வசதி செய்யப்பட்டுள்ள புகை பட நகல்களை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.''

9. மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான மதுரை மாநகராட்சி நகர திட்டமிடுநரின் அறிக்கை, செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் மற்றொரு எதிர்மனுதாரரான அரிஸ்டோ சிறப்பு மருத்துவமனை உரிமையாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறை மன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு, பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 (மத்தியம்), வார்டு எண் 61, பைபாஸ் ரோடு, அபர்ணா டவர் எதிரில் பொன்மேனி கதவு எண் 50–ல் இயங்கி வரும் ''அரிஸ்டோ'' மல்ட்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை பல படுக்கை அறைகள் கொண்டு மூன்று மாடிகளுடன், செயல்பட்டு வரும் இவ்மருத்துவமனை திட்ட அனுமதிக்கு மாறாக கூடுதலாக

கட்டப்பட்டுள்ளது என்பதும், மேலும், அரிஸ்டோ மருத்துவமனை கட்டிடத்திற்கு அரசு விதிகளின்படி 6 மீட்டர் இடைவெளி இடம் (Set Back Space) இரண்டு புறமும் இடைவெளி இடம் விடாமலும், பார்க்கிங் வசதியில்லாமலும் கட்டப்பட்டுள்ளதால் வாகனத்தை ரோட்டில் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது என்பதும், இக்கட்டிடத்தை, நகர் ஊரமைப்பு சட்டம், 1971–ன் பிரிவு 85 மற்றும் உடன்படிக்கப்பட்ட பிரிவுகள் 56(1) மற்றும் 57 கீழ் உரிய அறிவிப்பு வழங்கியும் மற்றும் அரசாணை எண் 07 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை நாள் 10.01.2023–ன்படியும், மற்றும் நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 21724/2016/BA2 நாள் 03.01.2017–ன்படி விரைவான நடவடிக்கை எடுக்குமாறும் மற்றும் நடவடிக்கை எடுக்காத மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் சம்மந்தப்பட்ட அலுவலர்களின் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற மதுரை அமர்வு வழக்கு எண்W.P.(MD) No.12175 of 2018, W.M.P(MD) No.11079 and 11080 of 2018ல் 01.02.2024 நாளிட்ட ஆணைக்கிணங்க, காவல் கண்காணிப்பாளர், காவல் ஆணையர், மாநகராட்சி ஆணையர் (ஒருங்கிணைப்பாளர்), நகர் மற்றும் ஊரமைப்பு துணை இயக்குநர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வருவாய் கோட்டாட்சியர், உதவி இயக்குநர் பேரூராட்சி, செயற்பொறியாளர் TANGEDCO ஆகியோரை கொண்ட உயர்மட்ட கண்காணிப்பு குழு அமைத்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் (நநி1) துறையின்அரசாணை (2D) எண் 15, நாள் 01.03.2024ல் ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி, உயர்மட்ட கண்காணிப்பு குழுவின் உறுப்பினர்களை நியமித்து மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை எண் Roc.No.17565/2022/TP3 நாள் 24.10.2024ல் ஆணை வெளியிடப்பட்டது என்பதும், அதன்படி கண்காணிப்புக் குழுக் கூட்டம் நடத்துவதற்கு ஏதுவான நாள் தெரிவிக்கக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், இருப்பினும், 1971ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டம், 282, 296 (1) மற்றும் (2) வது பிரிவுகளின் கீழ் அறிவிப்பு மேற்படி கட்டிடத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதும், விதிமீறல் செய்து கட்டப்பட்டுள்ள அரிஸ்டோ சிறப்பு மருத்துவமனை குறித்தும் உயர்மட்ட கண்காணிப்புக் குழு கூட்டப் பொருளில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதும், அக்குழு வழிகாட்டுதலின்படி மேற்படி கட்டிடத்தின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், மதுரை மாநகராட்சி நகர திட்டமிடுநரின் அறிக்கை, செயற்பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் புகார் தொடர்பாக அரிஸ்ட்டோ சிறப்பு மருத்துவமனை கட்டிடம் அனுமதி உத்தரவு எண்.39/10 க.வி.எண்.மெ.ம.பொ 5/8301/09 நாள் 20.01.2010ன்படி அடித்தளம் 6806 சதுரடி, தரை தளம் 7882 சதுரடி, முதல் தளம் 5780 சதுரடி இரண்டாம் தளம் 5780 சதுரடி அனுமதியுடனும், மதுரை மாநகராட்சி திட்ட அனுமதி உடன் வரைபடம் மற்றும் கட்டிட அனுமதி பெறப்பட்டு கட்டப்பட்டுள்ளது என்பதும், மூன்றாம் தளத்திற்கு அனுமதி பெறாததால், மதுரை மாநகராட்சியால் அனுமதியற்ற கட்டுமானத்திற்கு அபராத தொகை ரூ.30,000/– செலுத்தியும், அதற்குரிய வரியினையும், செலுத்தப்படுகிறது என்பதும், மேலும், அடிதளத்திலும், கட்டிடத்தின் பின்புறமும் 9000 சதுரடி அளவில் வாகன பார்க்கிங் வசதி உள்ளது என்பது, எதிர்மனுதாரரான அரிஸ்டோ சிறப்பு மருத்துவமனையின் உரிமையாளரின் கடிதம் மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மதுரை மாநகராட்சி நகர திட்டுமிடுநரின் அறிக்கை மற்றும் செயற்பொறியாளரின் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மேற்கண்ட விதிமீறி கட்டப்பட்ட அரிஸ்ட்டோ சிறப்பு மருத்துவமனை கட்டிடம் குறித்து, மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்டக் கண்காணிப்புக்குழுக் கூட்ட பொருண்மையில் சேர்க்கப்பட்டுள்ளதால், அக்கூட்டத்தில் எடுக்கப்படும் கூட்ட நடவடிக்கைகளின்படி, உரிய சட்டபூர்வ நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 21-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

(1) திரு. R. மயில்சாமி,
பிளாட் எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி, மதுரை

(2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
மதுரை.

(3) செயற்பொறியாளர் (திட்டம்),
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம், மதுரை–625 002.

(4) உரிமையாளர்,
அரிஸ்டோ மல்ட்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை,
எண் 50, By-Pass Road,
பொன்மேனி, மதுரை–625 016.

(5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

(6) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

<u>நகல் :</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032

22/1/26
செயலாளர்
22/1/26 2/10